**சார்பு நீதிமன்றம், வந்தவாசி திருவண்ணாமலை மாவட்டம்.**

முன்னிலை- திருமதி.ச.சரண்யா., எம்.எல்.,

சார்பு நீதிபதி, வந்தவாசி

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02-ம் நாள் திங்கட்கிழமை

**வழக்கிடை மனு எண்.06/2026 in அசல் வழக்கு எண்.21/2023**

1. சுப்பிரமணி தம்பிரார்

2. முருகன் ...... மனுதாரர்கள்/ வாதிகள்

/எதிர்/

1. ராமகிருஷ்ண நாயுடு

2. சீனுவாச நாயுடு ..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 26.02.2026 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.நெடுஞ்செழியன்,அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P.பாண்டியன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், மனு மற்றும் எதிர்உரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, இம்மனுவில் கண்டுள்ள காரணங்களை அனுசரித்து மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை

ஏற்று குறியீடு செய்ய வேண்டி உ.வி.மு.ச. கட்டளை VII, விதி. 14(3) உ.வி.மு.ச -ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. 2 ம் மனுதாரர்/2 ம் வாதி தாக்கல் செய்ள்ள மனுவின் சுருக்கம்-</u>**

2.1) தான் மேற்படி தாவாவில் 2 ம் வாதி என்றும், இம்மனுவில் 2 ம் மனுதாரர் என்றும், 1ம் மனுதாரருக்காகவும், இம்மனுவை தாக்கல் செய்வதாகவும், மேற்படி வழக்கில் வழக்கறிஞர் வாதத்திற்காக 17.02.2026 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், தாங்கள் இந்த வழக்கில் புஞ்சை சர்வே எண்.111/4 எ-ல் உள்ள கிணறு மின் இணைப்பு சம்மந்தமாக வழக்கு தொடர்ந்துள்ளதாகவும், தாவா கிணற்றிற்கான மின்இணைப்பு இருந்தற்கான மின்கட்டண அட்டை தொலைந்து போய் இருந்ததாகவும், அதனால் உரிய நேரத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், தற்போது தாவா சொத்தில் 1ம் வாதி பெயரில் உள்ள மின் இணைப்பு எண்.273-010-206-க்கான மின் கட்டண அட்டை தற்போது தேடி எடுத்து கிடைக்கப்பெற்றதாகவும், மேலும் தாவா சொத்திற்கு அருகாமையில் உள்ள 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.111/4 பி மற்றும் சில சொத்துக்களை 1ம் பிரதிவாதி அவரது பேரரான அனில்யோகேஷ் என்பவருக்கு 28.11.2022 ல் தானசெட்டில்மெண்ட் செய்துள்ளதாகவும், இதனை 1ம் பிரதிவாதி தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளதாகவும், மேற்சொன்ன தானசெட்டில்மெண்ட் பத்திர நகலை சார்பதிவாளர் அலுவலகத்தில் பெற்று தற்போது தாக்கல் செய்துள்ளதாகவும், இதனை தாக்கல் தான் தங்கள் தரப்பு நியாத்தை தெளிவுப்படுத்த முடியும் என்றும், எனவே

மேற்படி ஆவணங்களை ஏற்று தன் தரப்பில் குறியீடு செய்ய கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.) 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்உரையின் சுருக்கம்:-**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கது அல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும், மேற்படி வழக்கு விசாரணை முடிந்து வாதத்திற்கு போட்டிருக்கும் நிலை வழக்கை Re-open செய்ய கோருவதில் நோக்கம் வழக்கின் நடவடிக்கை தாமதப்படுத்துவதாக இருக்கிறது என்றும், மேற்படி வழக்கில் தாவா சொத்தான கிணறு, மனுதாரர் நிலத்திலும், எதிர்மனுதாரர் நிலத்திலும் சேர்ந்தாற்போல் உள்ளது என்பது தான் எதிர்மனுதாரர் தரப்பு வழக்காகும் என்றும், எனவே மனுதாரர் தனக்கு சொந்தமான சர்வே எண்.111/4 எ மட்டிலும், முழுவதுமாக கிணறு உள்ளது என நிரூபணம் செய்வதை விட்டு, மனுதாரர் பெயரில் உள்ள மின் அட்டை தாக்கல் செய்வதால் எந்த பிரயோஜனமும் இல்லை என தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்வதாகவும், மேலும் மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் மின் இணைப்பு அட்டையானது தாவா கிணற்றுக்கு சம்மந்தப்பட்டது இல்லை என்றும், மனுதாரரே அதனை ஜோடித்து தயார் செய்துள்ளதாகவும், மேற்படி 1ம் பிரதிவாதியே தனது குறுக்கு விசாரணையில், பிரச்சனைக்குரிய கிணறு வழக்கில் சம்மந்தப்பட்டுள்ளது என்பதால் அதுகுறித்து 20.11.2022 தேதியில் செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்பதை ஒப்புக்கொண்ட நிலையில் மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் செட்டில்மெண்ட் சான்று நகல் இந்த வழக்கில் அவசியமற்றது என்றும், அதனால் அந்த

ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் எந்தவித பரிகாரமும் கோரமுடியாது என்பதனையும் இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4. இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது பிரச்சனை யாதெனில், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்று குறியீடு செய்ய வேண்டுமா? என்பதே ஆகும்.**

(i) மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் இல்லை. இருதரப்பின் வாதம் கேட்கப்பட்டது.

(ii) அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினைன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேலும் மனுதாரர்கள் தரப்பின் முக்கிய கோரிக்கை யாதெனில் இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை, வழக்குரையுடன் தாக்கல் செய்யாததை மன்னித்து தற்போது அந்த ஆவணங்களை பெற்றுக்கொண்டு குறியீடு செய்யப்படவேண்டும் என்பதே ஆகும். மனுதாரர்கள் தரப்பின் முக்கிய வாதம் யாதெனில் இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தற்போதுதான் கிடைக்கப்பெற்றன என்றும், வழக்கிற்கு மிக முக்கிய ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டும் என்பதே ஆகும். எதிர்மனுதாரர்கள் தரப்பின் முக்கிய வாதம் யாதெனில், மனுதாரர்கள் உரிய நேரத்தில் ஆவணங்களை தாக்கல் செய்ய தவறியதற்கு சரியான காரணங்கள் குறிப்பிடவில்லை என்றும், மேலும் எதிர்மனுதாரர்களை அலைகழிக்க

வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால், இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்பதே ஆகும்.

(iii) அசல் வழக்கின் வாதிகள் தான் சார்ந்திருக்கும் ஆவணங்களை பிராதுடன் தாக்கல் செய்யவேண்டும். அதேபோல் அசல் வழக்கின் பிரதிவாதிகள் தாங்கள் சார்ந்திருக்கும் ஆவணத்தை எதிர் வழக்குரையுடன் தாக்கல் செய்யவேண்டும். இந்த வழக்கை பொறுத்தவரை வாதி வழக்குரையுடன் தாக்கல் செய்யாத ஆவணங்களை காலதாமதத்தை மன்னித்து பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கோரியுள்ளார். மேற்படி ஆவணங்கள் இந்த வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் என்று குறிப்பிட்டு, அவைகளை பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கோருகிறார். ஆனால் எதிர்மனுதாரர்கள் தரப்பில் அந்த ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iv) தற்போது மேற்படி ஆவணங்களை மனுதாரர் தரப்பில் பெற்றுக்கொள்ளவேண்டுமா என்பதே இங்கு தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை ஆகும். அசல் வழக்கில் வாதிகள் வழக்குரையுடன் தாக்கல் செய்யாத ஆவணங்களை இந்நீதிமன்ற அனுமதியுடன் பின்னிட்டு தாக்கல் செய்ய வழிவகை உள்ளது. எனவே இந்த ஆவணங்களை பெற்றுக்கொள்ளாமல் போனால் வாதிகளின் தரப்பிற்கு குந்தகம் ஏற்பட்டு விடும் என்ற மனுதாரர்கள் தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அமைந்துள்ளது. மனுதாரர்கள் தரப்பில் தற்போது தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் தன்மை, சாட்சிய மதிப்பீடு மற்றும் வழக்குக்கு சம்மந்தப்பட்டதா

போன்ற விவரங்கள் குறித்து வழக்கு விசாரணையின் போதும், தீர்ப்பின் போதும் தீர்மானிக்கப்படும். எனவே அவைகள் குறித்து ஆழமாக ஆராயாமல் ஆவணங்களைத் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ஆவணங்களைக் பெற்றுக்கொண்டு இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வாறாக இந்த பிரச்சனைக்கு தீர்வு கானப்படுகிறது.

**முடிவாக:-**

**இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பரப்பட்டது.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.03.02 17:22:24 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.03.02 17:22:31 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி.